RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar
MBBS MS DNB(Vascular)
98410 25996
Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari
MS (Opthal) DO(MB)
9444 286784
Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar
MBBS MS FMIS
9445 401793
Laparoscopic & Lower Surgeon
Dr Shanthi R
MBBS MS (Vascular)
9884 650945
Sr Vascular Surgeon
Dr Salins R
MBBS MD
87780 87742
General Physician
Dr Praveena E
MBBS MS (ENT)
9944 100443
Sr ENT Surgeon

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் | சென்னை, 22 நவம்பர் 2026 | ரூ.2/- | இதழ் - 134

# பாலஸ்தீன விவகாரத்தில் காங்கிரஸ் இரட்டை வேடம்! ராகுலின் பேச்சுக்கு பினராயி விஜயன் கண்டனம்!

சென்னை – 22 நவம்பர், 2026 பாலஸ்தீன விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகக் கேரள முன்னாள் முதல்வரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான பினராயி விஜயன் விமர்சித்துள்ளார்.

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் போரில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீன மக்கள் உயிரிழந்து வரும் நிலையில், இஸ்ரேலுக்கு ஆதரவான கருத்துகளை ராகுல் காந்தி தெரிவித்திருப்பது அரசியல் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ராகுல் காந்தி தெரிவித்த கருத்துகள் குறித்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது எதிர்ப்புகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், ராகுல் காந்தியின் கருத்துகள் பாலஸ்தீன விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியின் இரட்டை வேடத்தை வெளிப்படுத்துவதாகப் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – பாலஸ்தீனப் பிரச்னையில் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு குறித்துப் பல்வேறு அரசியல் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், பினராயி விஜயனின் கருத்தும் அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.